# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்புச் சட்டம்

---

(1995, ஜூன் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995 ஜூன் மாதம் 30 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 2.10 தபாற் செலவு : ரூபா 2.55

1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்புச் சட்டம்

[1995, ஜூன் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 10/93

நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; வெளிநாட்டு நடுத்தீர்ப்பு அளிப்புகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கும் வலுவுறுத்துவதற்குமான சமவாயத்திற்குப் பயன்கொடுப்பதற்கும்; (98 ஆம் அத்தியாயமான) நடுத்தீர்ப்புக் கட்டளைச் சட்டத்தையும், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை யின் குறித்த சில பிரிவுகளையும் நீக்கஞ்செய்வதற்கும்; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை நடாத்துவதற்கும், அதன்கீழ் அளிக்கப் பட்ட அளிப்புகளை வலியுறுத்துவதற்கும் அனைத்தடக்கமான சட்ட ஏற்பாடு செய்வது அவசியமானதாக இருக்கின்றதாதலாலும்: முன்னுரை.

அத்துடன் வெளிநாட்டு நடுத்தீர்ப்பு அளிப்புகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதற்கும் அவற்றை வலுவுக்கு இடுவதற்குமான 1958 ஆம் ஆண்டு சமவாயத்தின் நெறிகளுக்குப் பயன்கொடுப்பதற்காக சட்ட ஏற்பாடு செய் வது அவசியமானதாக இருக்கின்றதாதலாலும்:

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நடுத் தீர்ப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இத னகத்துப்பின்னர் "நியமித்த திகதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்.) சுருக்கப் பெய ரும், நடை முறைக்கு வரும் திகதி யும்.

## பாகம் I

### முதனிலையானவை

2. (1) எந்த நடுத்தீர்ப்பு உடன்படிக்கையைப் பின்பற்றி நடுத்தீர்ப்பு ஏற்புடைமை நடவடிக்கைகள் தொடங்கியதோ அந்நடுத்தீர்ப்பு உடன் படிக்கை நியமித்த திகதிக்குமுன்னர் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ் சரி, அல்லது பின்னர் செய்துகொள்ளப்பட்டிருப்பினுஞ்சரி, நியமித்த திகதிக்கு பின்னர் இலங்கையில் தொடங்கப்பட்ட எல்லா நடுத்தீர்ப்பு நட வடிக்கைகளுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள், 48 ஆம் பிரிவின் ஏற்பாடு களுக்கு அமைய, ஏற்புடையனவாதல் வேண்டும். ஏற்புடைமை.

(2) நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் நியமித்த திகதிக்குமுன்னர் தொடங் கப்பட்டிருக்குமிடத்து, நியமித்த திகதிக்குமுன்னர் வலுவிலுள்ள சட்ட மானது, திறத்தவர்கள் வேறுவகையில் உடன்பட்டுக்கொண்டாலொழிய, அத்தகைய நடுத்தீர்ப்பு நடவடிக்கை ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) (குடியரசு என்ற உரிமையிலோ வேறு ஏதேனும் தன்மை யிலோ) அரசானது ஒரு நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான திறத்தவராக இருக்குமிடத்து, அரசு இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் பிணிக்கப்பட்ட தாதல் வேண்டும்.

2—டீ 036402 1,100 (95/05)

## பாகம் II

### நடுத்தீர்ப்பு உடன்படிக்கை

*நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் படிவம்.*

3. (1) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையானது ஒப்பந்தம் ஒன்றில் உள்ள நடுத்தீர்ப்பு வாசகத்தின் வடிவத்தில் அல்லது தனியான உடன்படிக்கையின் வடிவத்தில் இருக்கலாம்.

(2) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையானது எழுத்தில் இருத்தல் வேண்டும். உடன்படிக்கையொன்று திறத்தவர்களினால் ஒப்பமிடப்பட்ட ஆவணத்தின் அல்லது உடன்படிக்கையின் பதிவேடாக அமையும் கடிதம் தொலைத் தந்தி, தந்தி பரிமாற்றத்தில் அல்லது வேறு தொலைத்தொடர்பு முறையில் அடங்கியிருக்குமானால் அது எழுத்தில் இருப்பதாகக் கருதப்படும்.

*பிணக்கை நடுத்தீர்ப்பு மூலம் தீர்த்து வைத்தல்.*

4. நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின்கீழ் நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிப்பதற்கு திறத்தவர்கள் உடன்பட்டுக்கொண்டுள்ள ஏதேனும் பிணக்கு, நடுத்தீர்ப்பு உடன்படிக்கை எவ்விடயம் தொடர்பில் செய்துகொள்ளப்பட்டதோ அவ்விடயம் பகிரங்கக் கொள்கைக்கு முரணானதாக அல்லது அத்தகைய பிணக்கு நடுத்தீர்ப்பு மூலம் தீர்மானிக்கமுடியாததாக இருந்தாலொழிய, நடுத்தீர்ப்பு மூலம் முடிவுசெய்யப்படலாம்.

*நடுத்தீர்ப்பு உடன்படிக்கையினால் மேவப்படும் பிணக்கு தொடர்பில் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்.*

5. உடன்படிக்கைமூலம் நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விடயம் ஒன்று தொடர்பில் நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்குத் திறத்தவராக உள்ளவர் உடன்படிக்கைக்கான மறு திறத்தவருக்கு எதிராக நீதிமன்றம் ஒன்றில் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றவிடத்து, மற்றத் திறத்தவர் அத்தகைய விடயம் தொடர்பில் நீதிமன்றம் நியாயாதிக்கம் பிரயோகிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தால், அத்தகைய விடயத்தைக் கேட்பதற்கோ, தீர்மானிப்பதற்கோ நீதிமன்றம் நியாயாதிக்கம் உடையதாதல் ஆகாது.

## பாகம் III

### நடுத்தீர்ப்பு நியாய சபையின் அமைப்பு

*நடுத்தீர்ப்பாளர்களின் எண்ணிக்கை.*

6. (1) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, நடுத்தீர்ப்பு நியாயசபையின் நடுத்தீர்ப்பாளர்கள் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கு திறத்தவர்கள் சுதந்திரமுடையவர்களாகவிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய தீர்மானம் எதுவும் செய்யப்படாதவிடத்து, நடுத்தீர்ப்பாளர்கள் எண்ணிக்கை மூன்றாதல் வேண்டும்.

(3) இரட்டை எண்கொண்ட நடுத்தீர்ப்பாளர்களை திறத்தவர்கள் நியமிக்கின்றவிடத்து, அவ்வாறு நியமிக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளர்கள் கூட்டாக மேலதிக நடுத்தீர்ப்பாளர் ஒருவரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

நடுத்தீர்ப் பாளர்களை நியமித்தல்.

7. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடுத்தீர்ப்பாளர்களை நியமிக்கும் நடவடிக்கைபற்றி உடன்பட்டுக்கொள்ள திறத்தவர்கள் சுதந்திரமுடையவர்களாதல் வேண்டும்.

(2) அத்தகைய உடன்படிக்கை இல்லாதவிடத்து —

(அ) தனியொரு நடுத்தீர்ப்பாளர் உள்ள ஒரு நடுத்தீர்ப்பின் விடயத்தில் திறத்தவர்கள் நடுத்தீர்ப்பாளர் பற்றி உடன்பட்டுக்கொள்ள இயலாதிருப்பின், அந்நடுத்தீர்ப்பாளர், திறத்தவர் ஒருவரின் விண்ணப்பத்தின்பேரில் மேல் நீதிமன்றத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) மூன்று நடுத்தீர்ப்பாளர்கள் உள்ள நடுத்தீர்ப்பின் விடயத்தில் ஒவ்வொரு திறத்தவரும் ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட இரு நடுத்தீர்ப்பாளர்கள் மூன்றாவது நடுத்தீர்ப்பாளரை நியமித்தல் வேண்டும் ; மறு திறத்தவரிடமிருந்து அவ்வாறு செய்யுமாறு வேண்டுகோளைப் பெற்றதிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக திறத்தவரொருவர் நடுத்தீர்ப்பாளரை நியமிக்கத் தவறினால் அல்லது இரண்டு நடுத்தீர்ப்பாளர்களும் அவர்கள் நியமிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக மூன்றாவது நடுத்தீர்ப்பாளர் பற்றி உடன்படத் தவறினால், அத்தகைய நியமனமானது திறத்தவர் ஒருவரின் விண்ணப்பத்தின்மீது மேல் நீதிமன்றத்தினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) திறத்தவர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியமன நடவடிக்கைமுறையின் கீழ் —

(அ) அத்தகைய நடவடிக்கைமுறையின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாகச் செயலாற்றுவதற்கு ஒரு திறத்தவர் தவறுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய நடவடிக்கைமுறையின் கீழ் திறத்தவர்கள் அல்லது நடுத்தீர்ப்பாளர்கள் அவர்களிடமிருந்து தேவைப்படுத்தப்பட்டவாறு உடன்படிக்கை ஒன்றை எய்தமுடியாதவிடத்து ; அல்லது

(இ) நிறுவனம் ஒன்று உட்பட மூன்றாவது திறத்தவர் அத்தகைய நடவடிக்கைமுறையின் கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் பணியைப் புரியத் தவறுகின்றவிடத்து ;

எவரேனும் திறத்தவர் நடுத்தீர்ப்பாளரை அல்லது நடுத்தீர்ப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக அவசியமான வழிவகைகளை எடுக்குமாறு மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(4) மேல் நீதிமன்றமானது, நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமிக்கும்போது, திறத்தவர்களுக்கிடையிலான உடன்படிக்கையின்கீழ் நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்குத் தேவைப்படும் எவையேனும் தகைமைகளுக்கும், சுதந்திரமானவரும் நடுநிலைமை வகிப்பவருமான நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் நியமனத்தைப் பெறுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய விடயங்களுக்கும் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

நடுத்தீர்ப்பாளரின் ஆணையை முடிவுறுத்துதலும் நடுத்தீர்ப்பாளரை அகற்றுதலும்.

8. (1) ஒரு நடுத்தீர்ப்பாளரின் ஆணையானது நடுத்தீர்ப்பாளர் தமது பதவிக்குரிய பணிகளைப் புரிய இயலாதவராக வருவாராயின், அல்லது வேறேதேனும் காரணத்திற்காக முறையற்ற காலதாமதமின்றிச் செயலாற்றத் தவறுவாராயின் அல்லது இறப்பாராயின் அல்லது பதவியிலிருந்து விலகுவாராயின் அல்லது திறத்தவர்கள் முடிவுறுத்தல் பற்றி உடன்பட்டால் முடிவுறுதல் வேண்டும்.

(2) ஒரு நடுத்தீர்ப்பாளர் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதில் தாமதம் காட்டினால், மேல் நீதிமன்றமானது, ஒரு திறத்தவரின் விண்ணப்பத்தின்பேரில் அத்தகைய நடுத்தீர்ப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அவரது இடத்தில் இன்னொரு திறத்தவரை நியமிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், திறத்தவர்கள் அவ்வாறு உடன்பட்டுக்கொண்டால், அத்தகைய அகற்றுகையும் நியமனமும், நடுத்தீர்ப்பு நிறுவனம் ஒன்றினால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) நடுத்தீர்ப்பாளரொருவரின் ஆணை முடிவுறுத்தப்படுமிடத்து, திறத்தவர்கள் வேறுவகையாக உடன்பட்டாலொழிய, நடவடிக்கைகள் புதிதாகத் தொடங்கப்படலாகாது.

பதிலீட்டு நடுத்தீர்ப்பாளரை நியமித்தல்.

9. எட்டாம் பிரிவின் கீழ் நடுத்தீர்ப்பாளரின் ஆணை முடிவுறுகின்றவிடத்து, பதிலீட்டு நடுத்தீர்ப்பாளர் ஒருவர் ஆணை முடிவுறுகின்ற நடுத்தீர்ப்பாளரின் நியமனத்திற்கு ஏற்புடைத்தான முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆட்சேபனைக்கான ஏதுக்கள்.

10. (1) ஒரு நடுத்தீர்ப்பாளராக நியமனம் ஒன்றை ஏற்குமாறு ஓர் ஆள் தேவைப்படுத்தப்படும்போது, அவரது நடுநிலைமைபற்றி அல்லது சுதந்திரம்பற்றி நியாயமாகவிருக்கக்கூடிய ஐயங்களை எழுப்பக்கூடிய எவையேனும் சூழ்நிலைகளை அவர் முதலில் வெளிக்காட்டவேண்டும். நடுத்தீர்ப்பாளர் ஒருவர் அவரது நியமனத் திகதி தொடக்கம், அத்துடன் நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளின்போது, எல்லாத் திறத்தவர்களுக்கும் அத்துடன் ஏனைய பதிலாட்களுக்கும் இந்த உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள எவையேனும் சூழ்நிலைகளை, அவர்களுக்கு அதுபற்றி ஏலவே அவர் அறிவித்திருந்தாலேயொழிய, காலதாமதமின்றி, வெளிக்காட்டுதல் வேண்டும்.

(2) ஒரு நடுத்தீர்ப்பாளருக்கெதிராக, அவரின் நடுநிலைபற்றி அல்லது சுதந்திரம்பற்றி நியாயமாகவிருக்கக்கூடிய ஐயங்களை எழுப்புகின்ற சூழ்நிலைகள் உளதாயிருந்தால் மாத்திரமே ஆட்சேபனை எழுப்பப்படலாம் ஒரு திறத்தவர், நியமனம் செய்யப்பட்டபின்னர் அவர் அறிந்துகொண்ட காரணங்களுக்காக மாத்திரம், அவரினால் நியமிக்கப்பட்ட ஒரு நடுத்தீர்ப்பாளருக்கெதிராக அல்லது எவரின் நியமனத்தில் அவர் பங்குபற்றினாரோ அந்த ஒரு நடுத்தீர்ப்பாளருக்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கலாம்.

(3) ஒரு நடுத்தீர்ப்பாளருக்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்க நாடுகின்ற ஒரு திறத்தவர், வேறு எவரேனும் ஆளினால் முடிபு எடுக்கப்படுதல் வேண்டும் என திறத்தவர்கள் தீர்மானித்தாலேயொழிய, முதலில் நடுத்தீர்ப்பாளரின் நடுநிலைபற்றி அல்லது சுதந்திரம்பற்றி ஐயங்களை எழுப்பும் சூழ்நிலைகள் பற்றி அவர் அறியவந்து முப்பது நாட்களினுள் நடுத்தீர்ப்பு நியாயசபையின் முன்னிலையில் அவ்வாறு செய்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்கின்ற ஒரு திறத்தவர் அத்தகைய விண்ணப்பத்தின்மீது நியாயசபையினது கட்டளை பற்றித் திருப்தியடையாதவிடத்து, அவர் அம்முடிபு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்களினுள், அக் கட்டளைக்கெதிராக மேல்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

## பாகம் IV

### நடுத்தீர்ப்பு நியாயசபையின் நியாயாதிக்கம்

**நடுத்தீர்ப்பு நியாயசபையின் தகுதி.**

11. (1) நடுத்தீர்ப்பு உடன்படிக்கை உள்ளதா என்பது சம்பந்தமான அல்லது அதன் செல்லுபடி சம்பந்தமான அல்லது அத்தகைய உடன்படிக்கை பகிரங்கக் கொள்கைக்கு முரணானதா அல்லது நிறைவேற்றப்பட இயலாததா என்பது சம்பந்தமான ஏதேனும் பிரச்சினை உட்பட அதன் நியாயாதிக்கத்தை நடுத்தீர்ப்பு நியாயசபை நிர்ணயித்துக் கொள்ளலாம் ; ஆனால் நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளுக்கான எவரேனும் திறத்தவர், அத்தகைய ஏதேனும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்படுகின்றவிடத்து, மேல் நீதிமன்றம் அத்தகைய பிரச்சினை பற்றி தீர்மானம் செய்கின்றவரையில் நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளைத் தொடரலாம்.

**உடன்படிக்கை தனிவேறாக்கப்படல்.**

12. நடுத்தீர்ப்பு நியாயசபையின் நியாயாதிக்கத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக ஒரு நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் செல்லுபடிபற்றி நிர்ணயிக்கும்போது, வேறோர் உடன்படிக்கையின் பாகமாக அமையும் அந்நடுத்தீர்ப்பு உடன்படிக்கை தனிவேறு உடன்படிக்கையாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**பாதுகாப்பிற்கான இடைக்கால வழிமுறைகள்.**

13. (1) ஒரு திறத்தவரின் வேண்டுகோளின்பேரில், பிணக்கின் விடயப்பொருளாக அமைகின்ற உரிமைக் கோரிக்கையைப் பாதுகாப்பதற்கு அல்லது பேணிக்காப்பதற்கு அவசியமென அது கருதுகின்ற அத்தகைய இடைக்கால வழிமுறையை எடுக்குமாறு மற்றைய திறத்தவருக்கு நடுத்தீர்ப்பு நியாயசபை கட்டளையிடலாம். நடுத்தீர்ப்பு நியாயசபையானது, அத்தகைய இடைக்கால வழிமுறைகளை எடுப்பதில் ஏற்படக்கூடிய ஏதேனும் செலவிற்கான, இழப்பிற்கான அல்லது சேதத்திற்கான பிணைப்பொறுப்பை அத்தகைய இடைக்கால வழிமுறைகளை எடுக்குமாறு கட்டளையிடப்பட்ட திறத்தவருக்கு ஏற்பாடு செய்யுமாறு அத்தகைய வேண்டுகோளைச் செய்த திறத்தவருக்குக் கட்டளையிடலாம் :

ஆயின் எவ்வாறாயினும், விதிவிலக்கான விடயங்களைத் தவிர அத்தகைய கட்டளை எதுவும் மறுதிறத்தவர்களை விசாரித்த பின்னரன்றி ஆக்கப்படலாகாது.

(2) இடைக்கால வழிமுறைகளை எடுக்கத் தேவைப்படுத்தும் ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபையின் கட்டளையானது, அத்தகைய இடைக்கால வழிமுறைகளை எடுக்க வேண்டுகோள் விடுக்கும் திறத்தவரினால், அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரில், நீதிமன்றத்தினால் வலுவுறுத்தப்படலாம்.

(3) இடைக்கால வழிமுறைகளை வலுவுறுத்துவதற்கென, (2) ஆம் உட்பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் ஒரு விண்ணப்பமானது, 5 ஆம் பிரிவுக்கு அல்லது நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்குப் பொருந்தாததாகவோ, அவ்வுடன்படிக்கையைத் தள்ளுபடி செய்வதாகவோ கருதப்படலாகாது.

**தீர்த்துவைத்தல்.**

14. (1) ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபை பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கு ஊக்கமளித்தல், நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளுக்கு முரணானதாக இருத்தலாகாது என்பதுடன், திறத்தவரின் உடன்பாட்டுடன் நடுத்தீர்ப்பு நியாயசபை ஒன்று, தீர்த்துவைத்தலை ஊக்குவிப்பதற்கு நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளின்போது எந்நேரத்திலும் மத்தியஸ்தம், இணக்கம் அல்லது வேறு நடவடிக்கைமுறை என்பவற்றையும் பயன்படுத்தலாம்.

(2) நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளின்போது திறத்தவர்கள் பிணக்கைத் தீர்த்துவைத்தால், நடுத்தீர்ப்பு நியாயசபை திறத்தவர்களினால் வேண்டுகோள் விடுக்கப்படின், உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதிகளின்மீது ஒரு நடுத்தீர்ப்பு அளிப்பு என்ற வடிவத்தில் தீர்த்துவைத்தலைப் பதிதலும் வேண்டும்.

(3) உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதிகளின்மீது செய்யப்பட்ட ஒரு நடுத்தீர்ப்பு அளிப்பு 25 ஆம் பிரிவிற்கிணங்கச் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதிகளின்மீதான ஒரு நடுத்தீர்ப்பு அளிப்பு எனவும் குறிப்பிட வேண்டும்.

(4) உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதிகளின்மீதான ஒரு நடுத்தீர்ப்பு அளிப்பு பிணக்குத் தொடர்பில் செய்யப்பட்ட வேறு ஏதேனும் நடுத்தீர்ப்பு அளிப்புப் போன்ற அதே நிலையையும் பயனையும் கொண்டுள்ளது.

## பாகம் V

### நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை நடாத்துதல்

**நடுத்தீர்ப்பு நியாயசபைப் பிணக்கைக் கையாளுதல்.**

15. (1) நடுத்தீர்ப்பு நியாயசபையானது, நடுத்தீர்ப்புக்கென அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பிணக்கை, நடுநிலையாகவும், செயல்முறைக்குத் தகுந்தவகையிலும் துரிதமான முறையிலும் கையாளுதல் வேண்டும்.

(2) ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபையானது, திறத்தவர்கள், தத்தமது வழக்குகளை எழுத்துமூலமோ வாய்மொழிமூலமோ முன்வைப்பதற்கும் மற்றைய திறத்தவர்கள் அல்லது வேறு எவரேனும் ஆளினால் நியாயசபைக்குக் கொடுத்துதவப்படும் எல்லா ஆவணங்களையும், ஏனைய சாதனங்களையும் பரிசீலிப்பதற்குமான சந்தர்ப்பத்தை எல்லாத் திறத்தவர்களுக்கும் வழங்குதல் வேண்டும். நடுத்தீர்ப்பு நியாயசபையானது, ஒரு திறத்தவரின் வேண்டுகோளின் பேரில் அதன் முன்னிலையில் உள்ள ஏதேனும் பிரச்சினையைத் தீர்மானிக்குமுன்னர் வாய்மொழிமூலமான விசாரணையொன்றை நடாத்தலாம்.

(3) ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபையானது, திறத்தவர் ஒருவர் நியாயமான காரணமின்றி அதன் முன்னிலையில் தோன்றத் தவறுதல் அல்லது அதனால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறுதல் எப்படியிருப்பினும், நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளைத் தொடருதலும் அதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள சாதனத்தின்மீது பிணக்கைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(4) திறத்தவர்கள், நிவாரணத்திற்கான புதிய இறைஞ்சுதல்களை உட்புகுத்தலாம்; ஆயின் அத்தகைய நிவாரணத்திற்கான இறைஞ்சுதல்கள் நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் நோக்கெல்லைக்கு உட்பட்டவவாகவும், அத்துடன் அவை உட்புகுத்தப்பட்ட நேரகாலத்தையும், ஏனைய சந்தர்ப்பங்களையும் கருத்திற்கொண்டு அவற்றை ஏற்பது நேரதற்றதாக இல்லாமலும் இருக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கை நெறிகளின்போது, இருதிறத்தவரில் ஒருவர், அதே நிலைமைகளில், முன்னர் உட்புகுத்தப்பட்ட நிவாரணத்திற்கான இறைஞ்சுதல்களைத் திருத்தலாம் அல்லது குறைநிரப்பலாம்; அத்துடன் தத்தமது வழக்குகளுக்கு ஆதாரமாக புதிய சந்தர்ப்பங்களை நம்பியிருக்கலாம்.

நடுத்தீர்ப்பு இடம்.

16. (1) நடுத்தீர்ப்பு இடம் பற்றி உடன்படுவதற்கு நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளில் திறத்தவர்களுக்கு சுதந்திரமுண்டு. அத்தகைய உடன்பாடு இல்லாதவிடத்து, நடுத்தீர்ப்பு இடம், திறத்தவர்களின் வசதி உள்ளடங்கலாக வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கெடுத்து நடுத்தீர்ப்பு நியாயசபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) நடுத்தீர்ப்பு இடத்தை ஏற்பாடு செய்யும் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நடுத்தீர்ப்பு நியாயசபை, திறத்தவர்கள் வேறுவகையாக உடன்பட்டால் அன்றி, அதன் உறுப்பினர்களிடையே கலந்தாலோசனைக்காக சாட்சிகளை, நிபுணர்களை அல்லது திறத்தவர்களை விசாரிப்பதற்கு அல்லது பொருட்கள், வேறு ஆதனம் அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்வதற்குத் தோதானதென அது கருதுகின்ற ஏதேனும் இடத்தில் கூடலாம்.

நடவடிக்கை முறை பற்றிய விதிகளைத் தீர்மானித்தல்.

17. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, திறத்தவர்கள் நடவடிக்கைகளை நடாத்துவதில் நடுத்தீர்ப்பு நியாயசபையினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை பற்றி உடன்படுவதற்குச் சுதந்திரமுடையவர்களாவார்கள். நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு அளிக்கப்பட்ட தத்துவம், ஏதேனும் சான்றின் ஏற்தகைமையை, இயைபுடைமையை, முக்கியத்துவத்தை, அத்துடன் ஆதாரத்தைத் தீர்மானிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளைத் தொடங்குதல்.

18. ஒரு நடுத்தீர்ப்பு—

(அ) இயைபான நடுத்தீர்ப்பு உடன்படிக்கை எந்த ஒரு பிணக்கிற்கு ஏற்புடையதோ அந்தப் பிணக்கு எழுந்தால், அத்துடன்.

(ஆ) உடன்படிக்கைக்கான ஒரு திறத்தவர் —

(i) பிணக்கை நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப்படுத்துமாறு அல்லது நடுத்தீர்ப்பிற்காகப் பிணக்கை ஆற்றுப்படுத்துவதில் ஒருப்படுமாறு அத்திறத்தவரைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்தலை உடன்படிக்கைக்கான மற்றைய திறத்தவரிடம் இருந்து கிடைக்கப் பெற்றிருந்தால்; அல்லது

(ii) பிணக்குத் தொடர்பாக ஒரு நடுத்தீர்ப்பு நியாய சபையை நியமிக்குமாறு அல்லது ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபையின் நியமனத்தில் இணையுமாறு அல்லது ஒருப்படுமாறு அல்லது அதனை அங்கீகரிக்குமாறு அத்திறத்தவரைத் தேவைப்படுத்துகின்ற ஓர் அறிவித்தலை உடன்படிக்கைக்கான மற்றைய திறத்தவரிடம் இருந்து கிடைக்கப் பெற்றிருந்தால்,

தொடங்கியிருந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

*முடிவுகள் செய்யப்படும் முறை.*

19. (1) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையில் முரணான ஒரு முன்னம் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளின்போது செய்யப்பட்ட ஏதேனும் முடிபு பெரும்பான்மையினரான நடுத்தீர்ப்பாளர்களினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு பெரும்பான்மை இல்லாதவிடத்து, ஏனைய நடுத்தீர்ப்பாளர்களினால் நியமிக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளரின் முடிபு அல்லது நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் அல்லது இச் சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் தவிசாளர் ஒருவர் இருந்தால், அத்தகைய தவிசாளரின் முடிபு, பிணிப்பதாக இருத்தல் வேண்டும்.

(2) ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபையின் தவிசாளர் இருக்குமிடத்து, நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை நடாத்திச்செல்ல தவிசாளர் தத்துவம் உடையவராதல் வேண்டும்.

*திறத்தவர்கள் அழைப்பாணையைப் பெறலாம்.*

20. (1) நடுத்தீர்ப்பு நியாயசபையின் எழுத்திலான முற்சம்மதத்தைப் பெற்ற ஒரு நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான எவரேனும் திறத்தவர், நியாயசபை முன்னர் விசாரணைக்காக வருமாறும், அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை நியாய சபைக்குக் காண்பிக்குமாறு ஓர் ஆளைத் தேவைப்படுத்துகின்ற அழைப்பாணைக்காக மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம்.

(2) நீதிமன்றத்தின் முன்னரான ஒரு வழக்கு விளக்கத்தில் விடையளிக்குமாறு அல்லது காண்பிக்குமாறு ஓர் ஆளைக் கட்டாயப்படுத்த முடியாத ஏதேனும் கேள்விக்கு விடையளிக்குமாறு அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிக்குமாறு (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க வழங்கப்பட்ட ஏதேனும் அழைப்பாணையின்கீழ் ஓர் ஆள் கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

*நடுத்தீர்ப்பு நியாய சபை முன்னர் வருவதற்கு மறுத்தல் அல்லது தவறுதல்.*

21. (1) திறத்தவர்களினால் வேறு வகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி, நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான ஒரு திறத்தவரல்லாத எவரேனும் ஆள் —

(அ) அழைப்பாணையின்கீழ் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபையினால் அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டபோது விசாரணைக்காக நடுத்தீர்ப்பு நியாயசபை முன்வருகைதர மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து ;

(ஆ) நடுத்தீர்ப்பு நியாயசபை முன்னர் ஒரு சாட்சியாகத் தோன்றி—

(i) நடுத்தீர்ப்பு நியாய சபையினால் ஒரு சத்தியத்தைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது ஒரு சத்தியத்தைச் செய்ய அல்லது உறுதியுரையை அல்லது சத்தியக் கடதாசியைச் செய்ய மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து, அல்லது

(ii) விடையளிக்குமாறு நடுத்தீர்ப்பு நியாயசபையினால் சாட்சி தேவைப்படுத்தப்பட்ட ஒரு வினாவிற்கு விடையளிக்க மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து ; அல்லது

(iii) அழைப்பாணையின்கீழ் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபையினால் காண்பிக்குமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட ஓர் ஆவணத்தைக் காண்பிக்க மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து ; அல்லது

(இ) நடுத்தீர்ப்பு நியாயசபை தேவைப்படுத்தக்கூடிய வேறு ஏதேனும் காரியத்தைச் செய்ய மறுக்கின்றவிடத்து அல்லது தவறுகின்றவிடத்து,

மேல் நீதிமன்றம் அதன் சார்பில் நடுத்தீர்ப்பு நடவடிக்கைக்கான ஒரு திறத்தவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்தால், விசாரணைக்காக நீதிமன்றத்தின் முன்னர் தோன்றுமாறு அல்லது இயைபான ஆவணத்தை அல்லது பொருளை நீதிமன்றத்திற்குக் காண்பிக்குமாறு அல்லது ஏதேனும் இயைபான காரியத்தைச் செய்யுமாறு தவறுநருக்குக் கட்டளையிடலாம்.

(2) மறுதிறத்தவருக்கு அறிவித்தல் கொடுத்தபின்னரும் நடுத்தீர்ப்பு நியாயசபையின் முன் அனுமதியுடனும் அல்லது சம்மதத்துடனும் தவிர அத்தகைய விண்ணப்பம் எதுவும் செய்யப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய கட்டளையை ஆக்குவது சூழ்நிலைகளில் அவசியமானதென நீதிமன்றம், தவறுகை புரிந்தவரை விசாரித்த பின்னர், கருதினாலொழிய (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை எதுவும் ஆக்கப்படுதலும் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை நீதிமன்றம் ஆக்குகின்றவிடத்து, அது, அதோடுசேர்த்து, நடுத்தீர்ப்பு நியாயசபைக்குப் பின்வருவன அனுப்பப்படுவதற்குக் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும் :—

(அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றிக் கொடுக்கப்பட்ட ஏதேனும் சான்றின் பதிவேடு ;

(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றிச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது பொருள் அல்லது அத்தகைய ஏதேனும் ஆவணத்தின் பிரதியொன்று ; அல்லது

(இ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஏதேனும் விடயம் பற்றிய விபரங்கள்,

அத்துடன், அத்தகைய ஏதேனும் சான்று ஆவணம் அல்லது விடயம், நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளின்போது விடயத்துக்கேற்ப, கொடுக்கப்பட்டதாக, சமர்ப்பிக்கப்பட்டதாக அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு முன்னுள்ள சான்று.

22. (1) திறத்தவர்களினால் வேறுவிதமாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, நடுத்தீர்ப்பு நியாயசபை முன்னுள்ள சான்றானது வாய்மொழி மூலம், எழுத்து மூலம் அல்லது சத்தியக் கடதாசி மூலம் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) திறத்தவர்களினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, நடுத்தீர்ப்பு நியாயசபையானது, உடன்படிக்கையின்கீழ் நடவடிக்கைகளைக் கொண்டுநடாத்தும் நோக்கங்களுக்காக சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதுவிக்கலாம் அல்லது சத்தியக்கடதாசி ஒன்றை ஏற்றுக்கொள்ளலாம்.

(3) திறத்தவர்களினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய நடுத்தீர்ப்பு நியாயசபை நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றின் கீழ் நடவடிக்கைகளை நடாத்துகையில், சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் பிணிக்கப்படுதல் ஆகாது.

பிரதிநிதித்துவம்.

23. நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்களினால் எழுத்தில் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவர் ஒருவர் —

(அ) நடுத்தீர்ப்பு நியாயசபைமுன் தாமே தோன்றலாம் அல்லது திறத்தவர் ஆனவர் ஆட்கள் குழுவொன்றாக இருக்குமிடத்து, அது கூட்டிணைக்கப்பட்டதாக இருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, அக்குழுவின் அலுவலர், ஊழியர் அல்லது முகவர் ஒருவர் மூலம் தோன்றலாம் ; அத்துடன்

(ஆ) திறத்தவர் அவ்வாறு விரும்பினால் சட்டத்தரணியொருவர் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படலாம்.

பிணக்கிலுள்ள விடயப் பொருள்களுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்.

24. (1) ஒரு நடுத்தீர்ப்பு நியாயசபையானது, பிணக்கிலுள்ள விடயப் பொருளுக்கு ஏற்புடைத்தானவையும் திறத்தவர்களினால் தெரிவு செய்யப்பட்டவையுமான அத்தகைய சட்ட விதிகளுக்கிணங்கப் பிணக்கை முடிவு செய்தல் வேண்டும். சொல்லப்பட்ட ஓர் அரசின் சட்டம் அல்லது சட்ட முறைமைபற்றிப் பெயர் குறிப்பிட்டிருந்தால் அது வேறுவகையாகக் கூறப்பட்டிருந்தாலொழிய, அவ்வரசின் நிலையான சட்டத்தை குறிப்பீடு செய்கிறது என்பதுடன், அவ்வரசின் சட்ட முரண் விதிகளைக் குறிப்பீடு செய்யவில்லையெனவும் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவர்களினால் பெயர் எதுவும் குறிப்பிடப்படாதவிடத்து, நடுத்தீர்ப்பு நியாயசபையானது, அது ஏற்புடைத்தானதெனக் கருதும் சட்டமுரண் விதிகளினால் தீர்மானிக்கப்பட்ட சட்டத்தை ஏற்புடைத்தாக்குதல் வேண்டும்.

(3) ஒராம் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் திறத்தவர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அளவுக்கு மட்டுமே ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) நடுத்தீர்ப்பு நியாயசபையானது, அவ்வாறு செய்யுமாறு வெளிப்படையாகத் திறத்தவர்கள் அதிகாரமளித்திருந்தால் மட்டுமே பொது நீதி, நியாயம் அல்லது வர்த்தகப் பயன்பாடுகள் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு அவற்றுக்கிணங்க முடிபு செய்தல் வேண்டும்.

## பாகம் VI

### அளிப்புகள்

**25.** (1) அளிப்பானது, எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் நடுத்தீர்ப்புச் சபையை அமைக்கும் நடுத்தீர்ப்பாளர்களினால் ஒப்பமிடப்படுதலும் வேண்டும். ஒரு நடுத்தீர்ப்பாளருக்கு மேற்பட்டவர்கள் இருக்கின்ற நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளில் நியாயசபையின் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் ஒப்பங்களானவை, விட்டு விடப்பட்ட ஏதேனும் ஒப்பத்துக்கான காரணம் எடுத்துக்கூறப்பட்டிருந்தால் போதுமானவையாக இருத்தல் வேண்டும். *அளிப்பின் படிவமும், உள்ளடக்கமும்.*

(2) அளிப்பானது, காரணங்கள் எவையும் கொடுக்கப்படத் தேவையில்லையெனத் திறத்தவர்கள் உடன்பட்டுக்கொண்டாலொழிய, அல்லது அளிப்பானது 14 ஆம் பிரிவின்கீழ் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட நியதிகளின் மீதான அளிப்பொன்றாக இருந்தாலொழிய, எக்காரணங்களின் அடிப்படையில் அது வழங்கப்பட்டிருக்கின்றதென்பதை எடுத்துக் கூறுதல் வேண்டும்.

(3) அளிப்பானது, 16 ஆம் பிரிவுக்கு இணங்கத் தீர்மானிக்கப்பட்டவாறு நடுத்தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியையும் இடத்தையும் எடுத்துக் கூறுதல் வேண்டும். அளிப்பானது அந்த இடத்தில் வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அளிப்பு வழங்கப்பட்டதன் பின்னர், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கு இணங்க நடுத்தீர்ப்பு நியாயசபை அமைக்கும் நடுத்தீர்ப்பாளர்களினால் ஒப்பமிடப்பட்ட பிரதியொன்று ஒவ்வொரு திறத்தவருக்கும் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**26.** இச்சட்டத்தின் VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நடுத்தீர்ப்பு நியாயசபையினால் வழங்கப்படும் அளிப்பானது இறுதியானதாதலும், நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்களைப் பிணிப்பதாதலும் வேண்டும். *அளிப்பு இறுதியானதாகும்.*

அளிப்பினைத் திருத்துதலும், பொருள் கோடல் செய்தலும், மேலதிக அளிப்பும்.

27. (1) அளிப்புக் கிடைத்த 14 நாட்களுக்குள், திறத்தவர்களினால் இன்னொரு காலப்பகுதி உடன்பட்டுக் கொள்ளப்பட்டிருந்தாலொழிய நடுத்தீர்ப்பு நியாயசபையின் வேண்டுகோளின் பேரிலாயினுஞ்சரி, வேறு வகையிலாயினுஞ்சரி —

(அ) ஒரு திறத்தவர், மற்றத் திறத்தவருக்கு அறிவித்தல் கொடுத்து-

(i) அளிப்பின் கணிப்பீட்டில் உள்ள எவையேனும் பிழைகளை, அதிலுள்ள எவையேனும் எழுத்துப் பிழைகளை அல்லது தட்டச்சுப் பிழைகளை அல்லது தவிர்வுகளை அல்லது அத்தன்மைவாய்ந்த பிழைகள் எவற்றையும் திருத்துமாறு நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு வேண்டுகோள் விடுக்கலாம் ;

(ii) அளிப்பின் ஒரு பாகமானது, நடுத்தீர்ப்புக்கு ஆற்றுப் படுத்தப்படாத விடயமொன்றின் மீதானதாக இருக்கின்றவிடத்து, அளிப்பைத் திரிபுபடுத்துமாறு நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு வேண்டுகோள் விடுக்கலாம் ஆயின், அத்தகைய பாகமானது மற்றப் பாகத்திலிருந்து தனிவேறாகப் பிரிக்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயத்தின்மீதான முடிபைப் பாதிப்பதாக இருத்தலும் ஆகாது.

(ஆ) திறத்தவர்களினால் அவ்வாறு உடன்பட்டுக்கொள்ளப்பட்டால், ஒரு திறத்தவர் மற்றைய திறத்தவருக்கு அறிவித்தல் கொடுத்து ஒரு குறிப்பிட்ட விடயம் பற்றி அல்லது அளிப்பின் ஒரு பாகம் பற்றி பொருள்கோடல் வழங்குமாறு நடுத்தீர்ப்பு நியாய சபைக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

(2) வேண்டுகோள் நியாயமானதென நடுத்தீர்ப்பு நியாயசபை கருதினால் அது, வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற 14 நாட்களுக்குள் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபையின் வேண்டுகோளின் பேரில் திறத்தவர் உடன்பட்டுக் கொள்ளக்கூடிய அத்தகைய நீண்ட காலப்பகுதிக்குள் திருத்தத்தை, திரிபைச் செய்யலாம் அல்லது பொருள்கோடலை வழங்கலாம் பொருள்கோடலானது அளிப்பின் பாகமாக அமைதல் வேண்டும்.

(3) நடுத்தீர்ப்பு நியாயசபையானது, அளிப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) என்னும் உட்பந்தியினால் குறிப்பிடு செய்யப்பட்டுள்ளது போன்ற ஏதேனும் தவறைத் தானாகவே திருத்தலாம்.

(4) திறத்தவர்களினால் வேறுவகையாக உடன்பட்டுக் கொள்ளப்பட்டாலொழிய, திறத்தவர் ஒருவர், மற்றத் திறத்தவருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, அளிப்பைப் பெற்றுக்கொண்ட 4 நாட்களுக்குள், நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட, ஆனால் அளிப்பிலிருந்து விட்டுவிடப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில் மேலதிக அளிப்பொன்றை வழங்குமாறு நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு வேண்டுகோள் விடுக்கலாம். மற்றத் திறத்தவர்களைக் கேட்டதன் பின்னர் வேண்டுகோளானது நியாயமானதென நடுத்தீர்ப்பு நியாயசபை கருதினால், அது கேட்பு முடிவடைந்து முப்பது நாட்களுக்குள் மேலதிக அளிப்பை வழங்குதல் வேண்டும்.

(5) இருபத்தாறாம் பிரிவின் ஏற்பாடுகள், அளிப்பின் திருத்தமொன்றுக்கு தெளிவுபடுத்தலொன்றுக்கு அல்லது பொருள்கோடலொன்றுக்கு அல்லது மேலதிக அளிப்புக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

28. தரப்பினர்களினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, நடுத்தீர்ப்பு நியாயசபை பணக் கொடுப்பனவுக்கான அளிப்பொன்றைச் செய்கின்றவிடத்து (தொகை கணிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கை மீதானதாகவிருப்பினுஞ்சரி அல்லது தொகை கணிக்கப் கணிக்கப்படாத உரிமைக் கோரிக்கை மீதானதாகவிருப்பினுஞ்சரி) நடுத்தீர்ப்பு நியாயசபையானது, அளிப்பில் நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட திகதியிலிருந்து அளிப்பு வழங்கப்படும் திகதிவரையில் தீர்த்தளிக்கப்பட்ட முதல் தொகைமீது நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட திகதிக்கு முன்னரான ஏதேனும் காலப் பகுதிக்கு அத்தகைய முதல் பணத்தொகைமீது தீர்த்தளிக்கப்பட்ட ஏதேனும் வட்டியுடன் சேர்த்து மேலதிகமாக, நடுத்தீர்ப்பு உடன்படிக்கையில் தரப்பினர்களுக்கிடையில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வீதத்தில் வட்டியையும் அல்லது அத்தகைய உடன்பாடு எதுவும் இல்லாதவிடத்து, நடுத்தீர்ப்பு அளிப்பை வழங்கும் நேரத்தில் நிலவும் சட்டரீதியான வட்டியையும் அத்துடன், அளிப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதிவரையில் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபை பொருத்தமானதென எண்ணும் அத்தகைய முந்திய திகதிவரையில் அவ்வாறு அளிக்கப்பட்ட கூட்டுமொத்தமான பணத்தொகைமீது மேற்சொல்லப்பட்ட வீதத்திலான மேற்கொண்டு வட்டியையும் செலுத்துமாறு கட்டளையிடலாம். வட்டி.

29. (1) நடுத்தீர்ப்பு நியாயசபையை அமைக்கும் நடுத்தீர்ப்பாளர்களுக்கு அவர்களது வேலைக்கும் செலவழிவுகளுக்குமாக நியாயமான நட்டவீட்டைச் செலுத்துவதற்கு தரப்பினர்கள் கூட்டாகவும், தனித் தனியாகவும் பொறுப்புடையவர்களாதல் வேண்டும் : நடுத்தீர்ப்பாளருக்கு நட்டவீடு

ஆயின், எவ்வாறாயினும் நடுத்தீர்ப்பு நியாயசபை அதன் அளிப்பில், பிணக்கைத் தீர்மானிக்க அதற்கு நியாயாதிக்கம் எதுவும் இல்லை என வெளிப்படுத்தினால், நடுத்தீர்ப்புக்கு வேண்டுகோள் விடுக்காத தரப்பினர், அவரால் அத்தகைய கொடுப்பனவு செய்யப்படுவதைத் தேவைப்படுத்துகின்ற அதிவிசேட சூழ்நிலைகள் காணப்பட்டால் மட்டுமே அத்தகைய கொடுப்பனவுக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) இறுதி அளிப்பானது, நடுத்தீர்ப்பு நியாயசபையை அமைக்கும் ஒவ்வொரு நடுத்தீர்ப்பாளருக்கும், அளிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பணத்தொகையை, அத்தகைய காலப்பகுதிக்குள், அளிப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதகாலப்பகுதி முடிவடையும் திகதி தொடக்கம் அத்தகைய ஒவ்வொரு தொகைமீதும் கணிக்கப்படும் சட்டரீதியான வட்டியுடன் சேர்த்து, நட்டவீடாகச் செலுத்துமாறு கட்டளையிடுதல் வேண்டும் :

(3) நடுத்தீர்ப்பு நியாயசபையை அமைக்கும் நடுத்தீர்ப்பாளர்களுக்கு, கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகையையும் அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் நட்டவீடாகச் செலுத்துவதற்கென

நடுத்தீர்ப்பு நியாயசபையானது திறத்தவர்கள் பிணைப்பொறுப்பு வைப்புச் செலுத்த வேண்டும் எனக் கட்டளையிடலாம். நிவாரணம் கோரும் ஒவ்வொரு இறைஞ்சிக் கேட்டலுக்கும் தனித்தனியான பிணைப் பொறுப்பு வைப்புக்கள் கட்டளையிடப்படலாம்.

(4) நடுத்தீர்ப்பு நியாயசபையினால் கட்டளையிடப்பட்ட பிணைப் பொறுப்பு அல்லது வைப்பில் அவரது பங்கை ஒரு திறத்தவர், பிணைப் பொறுப்பு வைப்புக் கொடுப்பனவுக்கான கட்டளையில் குறித்துரைக்கப் பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தத் தவறுகின்றவிடத்து, மற்றத் திறத்த வர் அல்லது திறத்தவர்கள் கட்டளையிடப்பட்ட முழுவைப்பையும் அல் லது பிணைப்பொறுப்பையும் செலுத்தலாம்.

(5) பிணைப்பொறுப்பு அல்லது வைப்புக் கொடுப்பனவுக்கான கட்ட ளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள், நடுத்தீர்ப்பு நியாய சபையினால் கட்டளையிடப்பட்ட பிணைப்பொறுப்பை வைப்பை, எந் தத் திறத்தவர்களும் செலுத்தாவிடத்து, நடுத்தீர்ப்பு நியாயசபை நடுத் தீர்ப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்தலாம்.

(6) நடுத்தீர்ப்பு நியாயசபையை அமைக்கும் நடுத்தீர்ப்பாளர்கள் நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளின்போது தமது செலவுகளைச் சமாளிப்ப தற்கென அத்தகைய பிணைப்பொறுப்பு அல்லது வைப்பிலிருந்து காசு பெற்றுக்கொள்ளலாம்.

**அளிப்பு நிறுத்தி வைக்கப் படுதலாகாது.**

30. நடுத்தீர்ப்பு நியாயசபையை அமைக்கும் நடுத்தீர்ப்பாளர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான நட்டவீடு செலுத்தப்படும்வரை, நடுத்தீர்ப்பு நியாயசபை அதன் அளிப்பை வழங்குவதை நிறுத்தி வைத்தல் ஆகாது.

## பாகம் VII

### (வெளிநாட்டு அளிப்புக்களை அங்கீகரித்தலும் வலுவுறுத்தலும் உட்பட) அளிப்புகள் தொடர்பில் நீதிமன்றங்களுக்கு விண்ணப்பம் செய்தல்.

**அளிப்பைக் கோப்பிடுவதற் கும் வலுவுறுத் துவதற்குமான விண்ணப்பம்.**

31. (1) எந்நடுத்தீர்ப்பு உடன்படிக்கையைப் பின்பற்றி நடுத்தீர்ப்பு அளிப்பு வழங்கப்பட்டதோ அந்நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றுக் கான திறத்தவர் ஒருவர் அளிப்பு வழங்கப்பட்டு 14 நாட்கள் முடிவ டைந்த பின்னர், ஓராண்டுக்குள், அளிப்பை வலுவுறுத்துவதற்காக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அளிப்பை வலுவுறுத்துவதற்கான விண்ணப்பம்—

(அ) அளிப்பின் மூலப் பிரதியுடன் அல்லது அத்தகைய அளிப்பின் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன்; அத்துடன்

(ஆ) எந்த மூல நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் கீழ் அளிப்பு வழங்கப் பட்டுள்ளதெனச் சொல்லப்படுகின்றதோ அவ்வுடன்படிக்கை யுடன் அல்லது அத்தகைய உடன்படிக்கையின் முறையாக அத் தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படு தல் வேண்டும் இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காக அளிப்பொன் றானது—

(i) அது நடுத்தீர்ப்பு நியாயசபையினால் அல்லது அந்நியாய சபையின் உறுப்பினர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது எனக் கொள்ளப்படுமானால் அத்துடன் உண்மையில் அது அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட வில்லை என நீதிமன்றத்துக்குச் சாட்டப்படவில்லை யாயின் ; அல்லது

(ii) அது, நீதிமன்றத்தின் திருப்திக்கேற்ப வேறுவகையில் அத் தாட்சிப்படுத்தப்பட்டிருந்தால்,

முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் வேண் டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்படும் ஆவணமொன்று அல்லது ஆவணமொன்றின் ஒரு பாகம் நீதிமன்றத்தின் அரசகருமமொழி அல்லாத மொழியொன்றில் அல்லது ஆங்கிலம் அல்லாத மொழியொன் றில் எழுதப்பட்டிருந்தால், அவ்வாவணத்தோடு, விடயத்துக்கேற்றவாறு, அவ்வாவணத்தின் அல்லது அதன் பாகத்தின் அத்தகைய அரச கரும மொழியிலான அல்லது ஆங்கில மொழியிலான சரியென்று அத்தாட்சிப் படுத்தப்பட்ட மொழிபெயர்ப்பொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, மொழிபெயர்ப்பொன் றானது, உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது சத்தியப் பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் ஒருவரினால் அல்லது அளிப்பானது எந் நாட்டில் வழங்கப்பட்டதோ, அந்நாட்டின் இலங்கையிலுள்ள இராஜதந் திர அலுவலர் ஒருவரினால் அல்லது காவற்கூறு அலுவலர் ஒருவரினால் அல்லது நீதிமன்றத்தின் திருப்திக்கேற்ப வேறுவகையில் அத்தாட்சிப் படுத்தப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவுக்கிணங்க நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆவண மொன்று, அது சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், அது எவ்விடயங்கள் தொடர் பானதோ அவ்விடயங்களுக்குப் போதுமான சான்றாக நீதிமன்றத்தி னால் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(6) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய் யப்பட்டு, 32 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய அளிப்பைத் தள்ளிவைப்பதற் கான விண்ணப்பம் எதுவும் செய்யப்படாதவிடத்து அல்லது நீதிமன்ற மானது, இச்சட்டத்தின் 33 ஆம், 34 ஆம் பிரிவில் அடங்கியுள்ள ஏற்பாடு களின்கீழ் அத்தகைய அளிப்பை ஏற்றங்கீகரிப்பதையும் வலுவுறுத்துவதை யும் மறுக்கும் காரணம் எதனையும் காணாதவிடத்து, திறத்தவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதற்கான ஒரு நாளன்று அளிப்பைக் கோப்பிட்டு, அளிப்புக்கிணங்கத் தீர்ப்பளிக்க முற்படுதல் வேண்டும். அவ் வாறு கொடுக்கப்பட்ட தீர்ப்பின்மீது தீர்வொன்று பதியப்படுதல் வேண் டும்.

நடுத்தீர்ப்பு அளிப்புகளைத் தள்ளிவைப்பதற்கான விண்ணப்பம்.

32. (1) இலங்கையில் செய்யப்பட்டவொரு நடுத்தீர்ப்பில் செய்யப் பட்ட நடுத்தீர்ப்பு அளிப்பொன்று, அளிப்பு கிடைக்கப்பெற்ற அறுபது நாட்களுக்குள்ளாக அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது மேல் நீதிமன்றத்தினால் தள்ளிவைக்கப்படலாம்.

(அ) விண்ணப்பத்தைச் செய்யும் திறத்தவர் பின்வருவனவற்றிற்கான எண்பிப்பைக் கொடுத்துதவுதல் வேண்டும் :--

(i) நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான ஒரு திறத்தவர், ஏதோவோர் இயலாமைக்கு உட்பட்டிருத்தல் அல்லது சொல்லப்பட்ட உடன்படிக்கையானது, எந்தச் சட்டத்திற்குத் திறத்தவர்கள் அமைந்தவர்களாகிறார்களோ அந்தச் சட்டத்தின்கீழ் வலிதற்றதாக இருத்தல் அல்லது இலங்கைச் சட்டத்தின்கீழ் அவ்விடயத்தின்மீது எந்தவிதக் குறிப்பும் இல்லாதிருத்தல் ; அல்லது

(ii) விண்ணப்பத்தைச் செய்யும் திறத்தவருக்கு, நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் நியமனம் அல்லது நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் பற்றிய முறையான அறிவித்தல் கொடுக்கப்படாதிருத்தல் அல்லது வேறு வகையாக, அந்தத் திறத்தவரின் வழக்கை முன்வைக்க இயலாதிருத்தல் ; அல்லது

(iii) அளிப்பானது, நடுத்தீர்ப்புக்கான சமர்ப்பிப்பின் நியதிகளினால் எண்ணப்படாத அல்லது அவற்றிற்குட்படாததான பிணக்கொன்றுடன் தொடர்புபட்டிருத்தல் அல்லது நடுத்தீர்ப்புக்கான சமர்ப்பிப்பின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கருமங்கள் மீதிலான முடிபுகளைக் கொண்டிருத்தல் :

ஆயின், எவ்வாறாயினும், நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பிலான முடிவு அவ்வாறு சமர்ப்பிக்கப்படாதனவற்றிலிருந்து பிரிக்கப்பட முடியுமாயின், நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படாத கருமங்கள் மீதிலான முடிபுகளைக் கொண்டுள்ள அளிப்பின் அப்பாகம் மட்டுமே தள்ளி வைக்கப்படலாம் ; அல்லது

(iv) திறத்தவர்களின் உடன்படிக்கை இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக இருந்தாலேயொழிய, நடுத்தீர்ப்பு நியாயசபையின் அமைப்பு அல்லது நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் திறத்தவர்களின் உடன்படிக்கையுடன் இணங்கியதாக இருக்கவில்லை அல்லது அத்தகைய உடன்படிக்கை எதுவும் இல்லாதவிடத்து, இச்சட்டத்திற்கு இணங்கியதாக இருக்கவில்லை ; அல்லது

(ஆ) மேல் நீதிமன்றம் —

(i) பிணக்கின் விடயப்பொருள், இலங்கைச் சட்டத்தின் கீழ் நடுத்தீர்ப்பு வாயிலாகத் தீர்ப்பளிக்கப்பட முடியாதது ; அல்லது

(ii) நடுத்தீர்ப்பு அளிப்பானது, இலங்கையின் பொதுக் கொள்கைக்கு முரணானதாகவுள்ளது,

எனத் தீர்மானித்தல்.

(2) அளிப்பொன்றைத் தள்ளிவைக்கும்படி விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, மேல் நீதிமன்றமானது, அளிப்பினால் செலுத்தப்படற்பாலதாகச் செய்யப்பட்ட பணம் எதுவும் நீதிமன்றத்திற்குக் கொணரப்பட வேண்டும் என அல்லது விண்ணப்பதஜ்ன் தீர்மானம முடிவுறும் வரை வேறுவகையாகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும் எனக் கட்டளையிடலாம்.

33. முப்பத்து நான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, எந்த நாட்டில் நடுத்தீர்ப்பு அளிப்பொன்று செய்யப்பட்டதோ அந்த நாடு பற்றிப் பொருட்படுத்தாது அது பிணிப்பதாக ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், திறத்தவர் ஒருவரால் 31 ஆம் பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அளிப்பைக் கோப்பிடுவதன்மூலம் வலுவுறுத்தப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டு நடுத்தீர்ப்பு அளிப்புகளை ஏற்றங்கீகரித்தலும் வலுவுறுத்தலும்.

34. (1) எந்த நாட்டில் நடுத்தீர்ப்பு அளிப்பொன்று அளிக்கப்பட்டதோ அந்த நாட்டைப்பற்றிப் பொருட்படுத்தாது, வெளிநாட்டு நடுத்தீர்ப்பு அளிப்பை ஏற்றங்கீகரித்தலும் வலுவுக்கிடுதலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே மறுக்கப்படலாம் :—

ஏற்றங்கீகரித்தலை அல்லது வலுவுறுத்தலை மறுப்பதற்கான ஏதுக்கள்.

(அ) எந்தத் திறத்தவருக்கு எதிராக அது வேண்டப்படுகிறதோ அந்தத் திறத்தவரின் ஆட்சேபனையின்பேரில் அங்கீகரிப்பு அல்லது வலுவுறுத்தல் எந்த நீதிமன்றத்தில் நாடப்பட்டதோ அந்த நீதிமன்றத்துக்கு அத்திறத்தவர் பின்வருவன பற்றிய எண்பிப்பைக் கொடுத்துதவினால் —

(i) நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவர் ஏதோவோர் இயலாமைக்கு உட்பட்டிருத்தல்; அல்லது சொல்லப்பட்ட உடன்படிக்கையானது, எந்தச் சட்டத்திற்குத் திறத்தவர்கள் அமைந்தவர்களாகிறார்களோ அந்தச் சட்டத்தின்கீழ் வலிதற்றதாக இருத்தல் அல்லது எந்த நாட்டுச் சட்டத்தின்கீழ் அத்திறத்தவர்கள் சொல்லப்பட்ட உடன்படிக்கையை எச்சட்டத்திற்கு அமைந்ததாகச் செய்துள்ளார்கள் என்பதுபற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லாதிருத்தல் ;

(ii) எந்தத் திறத்தவருக்கு எதிராக அளிப்பு வேண்டப்படுகிறதோ அந்தத் திறத்தவருக்கு நடுத்தீர்ப்பாளர் ஒருவரின் நியமனம் அல்லது நடுத்தீர்ப்பு நடவடிக்கைகள் என்பனபற்றிய முறையான அறிவித்தல் கொடுக்கப்படாதிருத்தல் அல்லது வேறுவகையாக அந்தத் திறத்தவரின் வழக்கை முன்வைக்க இயலாதிருத்தல் ; அல்லது

(iii) அளிப்பானது, நடுத்தீர்ப்புக்கான சமர்ப்பிப்பின் நியதிகளினால் எண்ணப்படாத அல்லது அடங்கியிராத தான பிணக்கொன்றுடன் தொடர்புபட்டிருத்தல் அல்லது அளிப்பானது, நடுத்தீர்ப்புக்கான சமர்ப்பிப்புகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கருமங்கள் மீதிலான முடிபுகளைக் கொண்டிருத்தல் :

ஆயின், எவ்வாறாயினும், நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பிலான முடிபு அவ்வாறு சமர்ப்பிக்கப்படாதனவற்றிலிருந்து பிரிக்கப்படக்கூடுமாயின், நடுத்தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கருமங்கள் மீதிலான முடிபை உள்ளடக்கியிருக்கும் அளிப்பின் அப்பாகம் மட்டுமே ஏற்றங்கீகரிக்கப்படலாம் அல்லது வலுவுறுத்தப்படலாம்; அல்லது

(iv) நடுத்தீர்ப்பு நியாயசபையின் அமைப்பு அல்லது நடுத்தீர்ப்பு நடவடிக்கைமுறை, திறத்தவர்களின் உடன்படிக்கைக்கிணங்க இல்லாதிருத்தல் அல்லது அத்தகைய உடன்படிக்கை இல்லாதபோது, எந்த நாட்டில் நடுத்தீர்ப்பு இடம்பெற்றதோ அந்த நாட்டுச் சட்டத்திற்கிணங்கியதாக இல்லாதிருத்தல்; அல்லது

(v) அளிப்பானது, இன்னமும் திறத்தவர்கள்மீது பிணிப்பதாக வராதிருத்தல் அல்லது எந்த நாட்டில் அந்த அளிப்புச் செய்யப்பட்டதோ அந்த நாட்டின் நீதிமன்றத்தினால் அல்லது எந்த சட்டத்தின்கீழ் அளிப்புச் செய்யப்பட்டதோ அச்சட்டத்தின்கீழ் தள்ளிவைக்கப்பட்டிருத்தல் அல்லது இடைநிறுத்தப்பட்டிருத்தல்; அல்லது

(ஆ) நீதிமன்றம்—

(i) பிணக்கின் விடயப்பொருள் இலங்கைச் சட்டத்தின்கீழ் நடுத்தீர்ப்பு வாயிலாகத் தீர்க்கப்படமுடியாதது என; அல்லது

(ii) அளிப்பினை ஏற்றங்கீகரித்தல் அல்லது வலுவுறுத்தல் இலங்கையின் பொதுக் கொள்கைக்கு முரணானதாக இருக்கிறது எனத்

தீர்மானித்தல்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (v) ஆம் உட்பந்தியில் குறிப்பிடு செய்யப்பட்ட நீதிமன்றமொன்றுக்கு, அளிப்பொன்றைத் தள்ளிவைப்பதற்காக அல்லது இடைநிறுத்துவதற்காக விண்ணப்பமொன்று செய்யப்பட்டால், எந்த நீதிமன்றத்தில் ஏற்றங்கீகரித்தல் அல்லது வலுவுறுத்துகை தடைப்பட்டதோ அந்த நீதிமன்றம், முறையானதெனக் கருதினால், அதன் முடிபை ஒத்திவைக்கலாமென்பதுடன், அளிப்பு ஏற்றங்கீகரிக்கப்படுவதனை அல்லது வலுவுறுத்தப்படுவதனைக் கோருகின்ற திறத்தவரின் விண்ணப்பத்தின்மீது நேரான பிணைப்பொறுப்பை வழங்குமாறு, மற்றைய திறத்தவருக்குக் கட்டளையிடலாம்.

**அளிப்பொன்றைக் கோப்பிடுவதற்கான விண்ணப்பமொன்றுடன் தள்ளுபடிசெய்வதற்கான விண்ணப்பத்தை ஒன்றுதிரட்டுவதற்கான தத்துவம்.**

35. (1) அளிப்பொன்றை வலுவுக்கிடுவதற்கும் அளிப்பொன்றைத் தள்ளுபடி செய்வதற்குமென நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் விண்ணப்பங்கள் முடிவுறாதிருக்குமிடத்து நீதிமன்றமானது விண்ணப்பங்களை ஒன்றுதிரட்டல் வேண்டும்.

(2) முப்பத்திரெண்டாம் பிரிவின்கீழ் அளிப்பொன்றைத் தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றமானது, 34 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்கள் எவற்றின் மீதும் அளிப்பொன்று வலுவுக்கிடப்படுவதை ஆட்சேபிப்பதற்கு நடுத்தீர்ப்பொன்றுக்கான திறத்தவரொருவரை அனுமதித்தலாகாது.

**நடுத்தீர்ப்பு நியாயசபைக்கு தணிப்புகள்.**

36. (1) மேல் நீதிமன்றமானது, நடுத்தீர்ப்பு நியாயசபை நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை மீளத்தொடங்க இயலச்செய்வதற்கு அல்லது அளிப்பைச் செல்லுபடியற்றதாக்குவதற்கான ஏதுக்களை அகற்றுவதற்கு அவசியமானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு அளிப்பொன்றைத் தள்ளுபடிசெய்வதற்கான விண்ணப்பமொவ்வொன்றை நிறுத்திவைக்குமாறு கட்டளையிடலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ்—

(அ) நடுத்தீர்ப்புக்கான எல்லாத் திறத்தவர்களும் அத்தகைய கட்டளையை ஆக்குமாறு வேண்டினாலொழிய; அல்லது

(ஆ) அத்தகைய நடுத்தீர்ப்புக்கான திறத்தவர்களுள் ஒருவர் அத்தகைய கட்டளையை ஆக்குமாறு வேண்டுகோள் விடுத்து, அளிப்பைச் செல்லுபடியற்றதாகச் செய்வதற்கு ஏதுக்கள் உண்டு என நீதிமன்றம் திருப்தியடைந்தாலொழிய,

மேல் நீதிமன்றத்தினால் கட்டளை எதுவும் ஆக்கப்படுதல் ஆகாது.

**மேன்முறையீடு.**

37. (1) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கு அமைவாக, இச்சட்டத்தின்கீழ் மேல்நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், இச்சட்டத்தின்கீழ், இப்பாகத்தின்கீழ் மேல் நீதிமன்றம் ஆக்கிய ஏதேனும் கட்டளை, தீர்ப்பு அல்லது தீர்வைக்கு எதிராகத் தவிர, மேல் நீதிமன்றத்தினால் ஏதேனும் மேன்முறையீடு அல்லது மீளளிப்பு அமைதல் ஆகாது.

(2) சட்டப்பிரச்சினைமீது மட்டும் அத்துடன் உயர் நீதிமன்றத்தின் அமைதியை முதலில் கேட்டுப்பெற்ற பின்னர் மாத்திரம், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட மேல் நீதிமன்றத்தின் கட்டளை, தீர்ப்பு அல்லது தீர்வைக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று அமைதல் வேண்டும்.

(3) உயர் நீதிமன்றமானது இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேல் நீதிமன்றத்தின் கட்டளையை, தீர்ப்பை அல்லது தீர்வையை உறுதிப்படுத்தலாம், நேர்மாறாக்கலாம் அத்துடன் வேறுபடுத்தலாம்.

(4) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றுக்கான திறத்தவர்கள் ஓர் அளிப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்கான ஏதேனும் உரிமையை விலக்கிவைக்க எழுத்துமூலம் உடன்பட்டுக்கொள்ளலாம். (இது இதனகத்துப்பின்னர் "விலக்களிப்பு உடன்படிக்கை" எனக் குறிப்பிடு செய்யப்படும்).

**விலக்களிப்பு உடன்படிக் கைகள்.**

38. (1) உயர் நீதிமன்றமானது, மேன்முறையீடு செய்யப்பட்ட அளிப்பு தொடர்பாக, நடுத்தீர்ப்பு உடன்படிக்கைக்கான திறத்தவர்களிடையே செய்துகொள்ளப்பட்ட விலக்களிப்பு உடன்படிக்கையொன்று வலுவிலிருக்குமானால், 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தச் சந்தர்ப்பத்திலும் மேன்முறையீடு செய்ய அனுமதி வழங்குதல் ஆகாது.

(2) ஒரு விலக்களிப்பு உடன்படிக்கையானது, குறிப்பிட்ட அளிப்பொன்று தொடர்பானதாக, குறிப்பிட்ட நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் கீழான அளிப்புகள் தொடர்பானதாக அல்லது ஒரே நடுத்தீர்ப்பு உடன்படிக்கை மூலமாகவாயினுஞ்சரி, அல்லாதவாயினுஞ்சரி எழுகின்ற வேறு ஏதேனும் விவரணத்தினவான அளிப்புகள் தொடர்பில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கலாம்.

(3) உடன்படிக்கையொன்று, அது நியமித்த திகதிக்குமுன்னர் செய்து கொள்ளப்பட்டாலுஞ்சரி அல்லது பின்னர் செய்துகொள்ளப்பட்டாலுஞ் சரி, அத்துடன் அது நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் பாகமாக அமைந்தாலுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, இப்பிரிவின் நோக்கங்களுக்காக விலக் களிப்பு உடன்படிக்கையொன்றாக இருக்கலாம்.

**உரிமைக் கோரிக்கை வழக்குத் தொடுத்தலில் தாமதம்.**

39. (1) எந்தப் பிணக்கிற்கு உடன்படிக்கை ஏற்புடைத்தாகின்றதோ அந்தப் பிணக்கொன்று எழும் பட்சத்தில், உரிமைக்கோரிக்கையொன்றின் வழக்குத் தொடுப்பில் முறையான விறுப்புக் கவனத்தைப் பிரயோகித்தல் உரிமைகோருபவரின் கடமையாதல் வேண்டும் என்பது நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் உட்கிடையான நியதியாதல் வேண்டும்.

(2) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றைப் பின்பற்றி உரிமைக் கோரிக்கையொன்றைத் தொடர்வதில் அல்லது வழக்குத் தொடுத்தலில் உரிமைகோருநர் ஒருவரால் முறையில்லாத தாமதம் ஏற்படுத்தப்பட்டுள்ளவிடத்து, பிணக்கிற்கான எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின்மீது நடுத்தீர்ப்பு நியாயசபையானது நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை முடிவுறுத்தி கட்டளையொன்றை ஆக்கலாம்.

(3) நடுத்தீர்ப்பு நியாயசபையானது —

(அ) தாமதம் கருத்தொன்றியதாகவும் அவமதிப்பானதாகவும் இருந்துள்ளது என ; அல்லது

(ஆ) தாமதம், நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளிலுள்ள வழக்குப் பிரச்சினைகளின் நியாயமான தீர்மானமொன்றை மேற் கொள்ள முடியாதிருக்கும் கணிசமான ஆபத்தொன்றை உருவாக்கும் அல்லது நடுத்தீர்ப்பு [illegible] வழக்கை களுக்கான மற்ற திறத்தவர்களுக்கு [illegible] அவர்களுக் கும் உரிமைகோருநருக்கும் இடையில் அன்றேல் ஒருவ

ரொருவருக்கிடையில் அல்லது அவர்களுக்கும் மூன்றும் திறத்தவரொருவருக்கும் இடையில் பாரதூரமான பங்கம் ஏற்படுத்தும் சாத்தியமுள்ள அல்லது ஏற்படுத்துயுள்ள அத்தகையதாகும் என,

திருப்திப்பட்டாலன்றி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குதல் ஆகாது.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றின்மீது செய்யப்பட்ட நடுத்தீர்ப்பு நியாயசபையின் ஏதேனும் கட்டளையால் இன்னலுறும் திறத்தவர் எவரும் மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

## பாகம் VIII

### மேல்நீதிமன்றத்தின் முன்னரான நடவடிக்கைகள்

40. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மேன்முறையீடு என்ற வகையிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி மேல்நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், மனு மற்றும் சத்தியக் கடதாசிமூலம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் மனுதாரர் அல்லது மனுதாரர்கள் தவிர்ந்த நடுத்தீர்ப்புக்கான எல்லாத் திறத்தவர்களும், அத்தகைய மனுவுக்கான எதிர்வாதிகளாகப் பெயர் குறிக்கப்படுதலும் அது பற்றி அவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்படுதலும் வேண்டும் நடவடிக்கை முறை.

(2) மனுவும், சத்தியக்கடதாசியும் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றம், கட்டளைமூலம் மனுவின் விடயம்பற்றித் தீர்மானிப்பதற்கான ஒரு நாளை நியமித்து, மனுவிற்கான எதிர்வாதிகளாகப் பெயர்குறிப்பிடப்பட்ட திறத்தவர்கள் தமது ஆட்சேபனைகள் எவையேனுமிருப்பின் அவற்றை சத்தியக்கடதாசிமூலம் ஆதாரப்படுத்தும் எழுத்துமூலம் எடுத்துரைப்பதற்கான திகதியொன்றை அவர்களுக்கு வழங்கி, அதன் பிரதியொன்று மனுதாரர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகச் செய்தலும் வேண்டும்.

(3) மேல்நீதிமன்றத்தின் முன்னிலையிலான நடவடிக்கைகளில் சான்று சத்தியக்கடதாசிமூலம் கொடுக்கப்படுதல் வேண்டும். ஆயின், நீதிமன்றம் அவ்வாறு செய்வது சரியென எண்ணினால், சத்தியக்கடதாசிமூலமான சான்றுடன் மேலதிகமாக வாய்மொழிமூல சான்றையும் ஏற்கலாம்.

(4) மேல்நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பத்தையும் கேட்டுக் கையாளுதலும் அதுபற்றிய தீர்மானத்தை இயலுமான விரைவில் வழங்குதலும் வேண்டும்.

41. ஓர் அளிப்பிற்கிணங்க, தீர்ப்பு வழங்கப்பட்டு, 31(6) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தீர்வையொன்று பதியப்பட்டுள்ளவிடத்து, அது (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின்கீழான தீர்வையொன்று போன்ற அதே முறையில் வலுவுறுத்தப்படலாம். அத்துடன் அதற்கிணங்க அத்தகைய வலுவுறுத்தலுக்கு தீர்வைகளை நிறைவேற்றுதல் தொடர்பிலான சட்டக் கோவையின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையவவாதல் வேண்டும். வலுவுறுத்தல்.

அறிவித்தல்களையும் அழைப்பாணைகளையும் சேர்ப்பித்தல்.

**42.** இச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஆளுக்கு அறிவித்தல் அல்லது அழைப்பாணை சேர்க்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து, அல்லது அனுமதிக்கப்படுமிடத்து அத்தகைய அறிவித்தல் அல்லது அழைப்பாணை —

(அ) அவ்வாளின் வழமையான அல்லது கடைசியாக அறியப்பட்ட வதிவிடத்தில் அல்லது தொழிலிடத்தில் சேர்ப்பிக்கப்படுவதற்கு அவ்வாளுக்கு முகவரியிடப்பட்ட பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலம் ;

(ஆ) அதன்கண் குறிப்பிடப்பட்ட திகதியன்று அவ்வாள் தோற்றமளிக்காவிட்டால், பிசுக்கால்மூலம் அவருக்கு நேரடியாக ஒப்படைப்பதன்மூலம் ; அத்துடன்

(இ) அவ்வாள் அறிவித்தலை அல்லது அழைப்பாணையை ஏற்றுக்கொள்வதனை வேண்டுமென்றே தவிர்த்தால், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க பதிலீட்டுச் சேர்ப்பித்தல் மூலம் ;

இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே சேர்ப்பிக்கப்படலாம்.

உயர்நீதிமன்ற விதிகள்.

**43.** உயர் நீதிமன்றமானது பின்வருவனவற்றிற்கான அல்லது பின்வருவன தொடர்பில் விதிகளை ஆக்கலாம் :—

(அ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு, அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தின் அல்லது மேன்முறையீட்டின் செலவுத்தொகைகள் ;

(ஆ) நடுத்தீர்ப்பு உடன்படிக்கைகள் எந்த உரிமைக்கோரிக்கைக்கு ஏற்புடைத்தாகின்றனவோ அந்த உரிமைக்கோரிக்கையொன்றை நிறைவேற்றுகையில் நீதிமன்றத்திற்கு அத்துடன் நீதிமன்றத்திலிருந்து பணக்கொடுப்பனவு, அத்துடன் அத்தகைய பணத்தின் முதலீடு.

காலக் கணிப்பு.

**44.** ஏதேனும் வகையின் நோக்கத்திற்காக கால விதிப்புக் காலப்பகுதியைக் கணிப்பிடுகையில் நடுத்தீர்ப்பொன்றின் தொடக்கத்திற்கும் விடயத்திற்கேற்ப அதன் முடிவுக்கும், அல்லது முடிவுறுத்தலுக்கும் இடையில் கழிந்துபோன காலப்பகுதி விலக்கிவைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் IX

### நடுத்தீர்ப்புப் பற்றிய பொது ஏற்பாடுகள்

நடுத்தீர்ப்பாளரின் பொறுப்பு.

**45.** நடுத்தீர்ப்பாளர் ஒருவர், நடுத்தீர்ப்பாளரின் தன்மையில் அவரால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எது தொடர்பிலும் கவனக்குறைவிற்குப் பொறுப்பானவர் அல்லர். ஆனால் அத்தகைமையில் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எது தொடர்பிலும் மோசடிக்குப் பொறுப்பாளியாவார்.

46. (1) நடுத்தீர்ப்பு உடன்படிக்கையின் முரணான கருத்தொன்று வெளிப்படுத்தப்பட்டாலன்றி, நடுத்தீர்ப்பு உடன்படிக்கையொன்றிற்கான திறத்தவர் ஒருவர் இறக்குமிடத்து உடன்படிக்கைப் பொறுப்பு விடுவிக்கப்படுதலாகாது அத்துடன் நடுத்தீர்ப்பு நியாயசபையை அமைக்கும் நடுத்தீர்ப்பாளரின் ஆணை இல்லாதொழிக்கப்படுதலும் ஆகாது; ஆனால் இறந்தவரின் மரணச் சொத்தினது சட்டப் பிரதிநிதியால் அல்லது அவருக்கெதிராக உடன்படிக்கை வலுவுக்கிடப்படற்பாலதாதல் வேண்டும்.

திறத்தவரின் இறப்பு.

(2) ஓராம் உட்பிரிவிலுள்ள எதுவும் எந்தச் சட்டவாக்கத்தின் அல்லது சட்டவிதியின் பயனைக்கொண்டு, ஆளொருவரின் இறப்பினால் வழக்குரிமை ஒழிந்து போகின்றதோ அந்த ஏதேனும் சட்டவாக்கம் அல்லது சட்டவிதி நடைமுறையிலிருப்பதைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

47. (1) (தொண்ணூற்றெட்டாம் அத்தியாயமான) நடுத்தீர்ப்புக் கட்டளைச்சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

நீக்கஞ் செய்தல்.

(2) (நூற்றியோராம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 693 முதல் 698 வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

48. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையில் ஒவ்வாமை கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின்கீழ் அல்லது 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் தவிர நடுத்தீர்ப்புக்கு விசேட ஏற்பாடு செய்யும் வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

நடுத்தீர்ப்புக்கு ஏற்பாடு செய்யும் ஏனைய சட்டங்களின் ஏற்புடைமை.

49. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையில் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

50. (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

பொருள் கோடல்.

"நடுத்தீர்ப்பு உடன்படிக்கை" என்பது ஒப்பந்தம் சார்ந்ததாயினுஞ் சரி, அல்லாவிடினுஞ்சரி, வரைவிலக்கணம் கூறப்பட்ட சட்ட உறவு தொடர்பில் திறத்தவர்களிடையே எழுந்துள்ள அல்லது எழக்கூடிய எல்லா அல்லது குறித்த சில பிணக்குகளை நடுத்தீர்ப்பிற்குச் சமர்ப்பிப்பதற்கென திறத்தவர்களினால் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை என்று பொருள்படும்;

"நடுத்தீர்ப்பு" என்பது நிரந்தர நடுத்தீர்ப்பு நிறுவனமொன்றினால் நிருவகிக்கப்பட்டாலுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி ஏதேனும் நடுத்தீர்ப்பு என்று பொருள்படும்:

"நடுத்தீர்ப்பு நியாயசபை" என்பது தனியொரு நடுத்தீர்ப்பாளரை அல்லது அதற்கு மேற்பட்ட நடுத்தீர்ப்பாளர்களைக்கொண்ட ஒரு குழாம் என்று பொருள்படும் ;

"அளிப்பு" என்பது பிணக்கின் பொருண்மை மீதான நடுத்தீர்ப்பு நியாயசபையின் முடிவொன்று எனப் பொருள்படும் ;

"வெளிநாட்டு நடுத்தீர்ப்பு அளிப்பு" என்பது இலங்கைக்கு வெளியே நடத்தப்பட்ட நடுத்தீர்ப்பொன்றில் செய்யப்பட்ட அளிப்பொன்று எனப் பொருள்படும் ;

"மேல் நீதிமன்றம்" என்பது கொழும்பு நீதிமுறை வலயத்தில் நடாத்தப்படுகின்றதும் அல்லது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் பெயர் குறிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு வலயத்தில் நடாத்தப்படுகின்றதுமான இலங்கையின் மேல் நீதிமன்றம் எனப் பொருள்படும் ;

"சட்ட வட்டி" என்பது குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 192 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், அப்போதைக்கு நடாத்தப்படுகின்றதுமான இலங்கையின் மேல் நீதிமன்றம் எனப் விதத்திலான வட்டி எனப் பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.